கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்குள்ள சந்தேகமெல்லாம் விசைத் தறியைக் கொண்டு வருகிற காரணத்தினால் இப்போது எப்படி விசைத்தறி கொண்டு வராத காரணத்தினால் கைத்தறி நெசவாளர்களுக்கு பாதகம் இருக்கிறதோ அதே பாதகம், வேலையில்லாத் திண்டாட்டம் வரக்கூடாது, அதைத் தடுக்க, கைத்தறியாளர்களுக்கு விசைத்தறியை ஒதுக்கி, கூட்டுறவுத் துறையில் பெரும்பான்மையாக விசைத்தறியை ஒதுக்கினால் வேலையில்லாத் திண்டாட்டம் தவிர்க்கப்படும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்கள் அத்தனைபேர்களுடையவும், அவர்கள் தனிப்பட்ட கருத்தையும் இப்போது அறிந்து வருகிறது. இன்று காலையில் எனக்குக் கிடைத்த தகவல்படி பெரும்பான்மையான கூட்டுறவு நெசவாளர்கள் இதை விரும்பியிருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது. இதை முழுமையும் பெற்ற பின்னால் அரசு பரிசீலித்து ஒரு முடிவிற்கு வரும்.

திரு. நா. வீராசாமி: அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது விசைத்தறியை மாவட்ட ரீதியாக ஒதுக்கும்போது கோவை மாவட்டத்திற்கு 8000-க்கு அதிகமாகவும், சேலம் மாவட்டத்திற்கு 7000-க்கு அதிகமாகவும், வடஆற்காடு, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களுக்கு மிகக் குறைந்த அளவிலும் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எந்த அடிப்படையில் இவை ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மிகப் பழைய காலத்துக் கதை. இப்போது ஒதுக்கப்பட்டதல்ல. அங்கத்தினர் அவர்களின் மாவட்டத்திற்கு வேண்டுமென்றால் எவ்வளவு வேண்டுமானாலும் தரத் தயாராயிருக்கிறோம்.

Veeranam Water-supply Scheme

*7 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the villages lying on the route from Veeranam lake near Chidambaram to Madras will also be benefited by the water-supply scheme when water is taken to Madras from the Veeranam lake ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

DR. H. V. HANDE : Sir, in view of the extraordinary water scarcity in the City of Madras, will the Hon. Minister be pleased to tell us clearly as to how many days or months or years it will take for this work to be completed so that we can at least know when the water will start coming—whether it is next year or the year next? Will the Hon. Minister take us into his confidence and tell us the time when the water is likely to come to the Madras City from the Veeranam lake?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி சிதம்பரம் தாலுக்கா கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதை பற்றி. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

[1969 ஆகஸ்ட் 16

திரு. முனு ஆதி: வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் சென்னைக்குக் கொண்டுவரும்போது எந்தெந்த மார்க்கமாக அது வருகிறதோ, நாஷனல் ஹைவேஸ் என்று வரும்போது இருபுறங்களிலுள்ள இடங்களுக்கு மாதத் தவணை கொடுத்து காலி செய்ய வசதி செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உரிய காலம் கொடுக்கப்படும். தென் ஆற்காடு ஜில்லா, செங்கல்பட்டு ஜில்லா வழியாகத் தண்ணீர் கொண்டுவரப் படும்.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, வீராணம் ஏரியி லிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வந்தாலும், குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னால் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கும் என்ற எண்ணம் நிலவி வருகிறது. இதைப்போக்க சென்ற அரசாங்கம் ஜேடர்பாளையத்திலிருந்தும் சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தைக் கைவசம் வைத்திருந்தது. அந்தத் திட்டத்தையும் இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, காவிரியிலிருந்து வீராணம் ஏரி வழியாகச் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரப்போகிறது. எத்தனை கியூசெக்ஸ் காவிரியிலிருந்து எடுக்கப்படும், அதனால் ஏற்படும் அச்சத்தைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வீராணத்தி லிருந்து 75 கியூசெக்ஸ் எடுப்பதாக இருக்கிறது.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவரவர்களே, வீராணம் ஏரி யிலிருந்து சென்னைக்குக் கொண்டுவரும் தண்ணீரைக் கிராமங் களுக்கு வழங்க முடியாவிட்டாலும் வழியிலிருக்கும் நகராட்சிகள், மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கும் உத்தேசம் உண்டா ? அவ்வாறான கோரிக்கைகள் திண்டிவனம், விழுப்புரம் பகுதியி லிருந்து வந்திருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோரிக்கைகள் வந்தன. ஆனால், தண்ணீர் கொடுப்பதற்கில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடி நீர் கொண்டு வரும் திட்டத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும்பொழுது தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதியிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் உள்ள விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று அஞ்சப்படுவது அரசுக்குத் தெரியுமா ? அந்த அச்சத்தைப் போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்னவென்று அறியலாமா ?

1969 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிச்சயமாக பாதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க சமீபத்தில் இந்தியாவிற்கு வந்த பிரெஞ்ச் நிபுணர்கள் கோஷ்டியார் சில நல்ல ஆலோசனைகளைக் கூறியிருப்ப தாகப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அது, நம்முடைய அரசுக்கும் அப்படிப்பட்ட ஆலோசனைகளைக் கொடுத்திருக்கிறதா ? அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது முடிவுகள் எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற ஆலோசனைகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டன. அவைபற்றியும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சார், வீராணம் ஏரியில் முறையாக இருக்கும் தண்ணீர் எவ்வளவு ? இந்தத் திட்டம் நிறை வேறினால் எவ்வளவு இருக்கும் ? இப்படித் தண்ணீர் எடுப்பதனால் சிதம்பரம் தாலுக்காவில் நீர்ப்பாசனம் பாதிக்கப்படுமேயானால், தடை ஏற்படாதா ? உணவு உற்பத்திப் பெருக்கம் குறையாதா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதுபற்றி சிதம்பரம் தாலுக்காவிலிருந்த வேளாண்மைப் பெருங்குடி மக்களை முன்னைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும், அப்பொழுது இருந்த பொதுப்பணித்துறை அமைச்சராகிய நானும் கலந்து ஆலோசித்து, அதிகாரிகளைக் கூட்டி இரண்டு நாட்கள் விவாதித்தோம். அதற்குப்பிறகு சிதம்பரம் தாலுக்கா விலுள்ள விவசாயிகளும் வீராணத்திலிருந்து தண்ணீரை சென்னைக்கு எடுப்பதால் எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நெல்லிக்குப்பம் வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக்கள்

*8 வினா.—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் வட்டாரத்தில் (Block) உள்ள பஞ் சாயத்துக்களில் மாதாந்திரக் கூட்டமே நடைபெறாத பஞ்சாயத் துக்கள் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவை யாவை ?

(உ) கூட்டங்கள் மாதந்தோறும் முறையாக நடைபெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) மாதாந்திரக் கூட்டமே நடைபெறாத ஊராட்சிகள் இல்லை.

(இ) எழாது.